செ.வெ.எண்:02 நாள்:03.06.2019

கரூர் மாவட்டம்

**கரூர் மாவட்டதிற்கு 2019-2020ம் ஆண்டுக்கு ரூ.5011.52 கோடி முன்னுரிமை கடன் வழங்குவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதற்கான கடன் திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டார்.**

கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (03.06.2019) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கணவனால் கைவிடப்பட்டோர் உதவித்தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை, வீட்டுமனைப்பட்டா, வேலைவாய்ப்பு, காவல்துறை நடவடிக்கை, புதிய குடும்ப அட்டை, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 214 மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு பரிசீலித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் முகாம் மனுக்கள் மீது தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மாவட்ட உயர் அலுவலர்களின் மனுநீதி நாள் முகாம் மனுக்கள், மக்களைத்தேடி வருவாய்த்துறை அம்மா திட்ட மக்கள் குறை தீர்க்கும் முகாமில் பெறப்பட்ட மனுக்கள் ஆகியவற்றின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு காலதாமதம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் கண்பார்வையற்ற ஒரு பயனாளிக்கு ரூ.3300 மதிப்பில் நவின அதிரும் மடக்கு குச்சியையும், ஒரு பயனாளிக்கு ரூ,900 மதிப்பில் தாங்கு கட்டைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினர்.

மேலும் மாவட்ட முன்னோடி வங்கியின் சார்பாக 2019-2020ம் ஆண்டிற்கு தனியார் மற்றும் கூட்டுறவு ஊரக வங்கிகள் வழியாக வேளாண் கடனாக ரூ.2401.45 கோடியும், சிறுகுறு மற்றும் நடுத்தர வர்க்க தொழில் மற்றும் ஏற்றுமதி கனைாக ரூ.1312.79 கோடியும், இதர முன்னுரிமை கடனாக ரூ,1297.28 கோடியும் என மொத்தம் ரூ.5011.52 கோடி முன்னுரிமை கடன் வழங்குவதற்காக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான 2019-2020ம் ஆண்டு கடன் திட்ட அறிக்கையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன் இ.ஆ.ப அவர்கள் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திருமதி செல்வசுரபி, மாவட்ட வழங்கல் அலுவலர் திருமதி.மல்லிகா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திருமதி.லீலாவதி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.கணேஷ், மாவட்ட மாற்றுத்திறனானிகள் நல அலுவலர் திருமதி.ஜான்சி, நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.எம்.பரமேஷ்குமார், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.எம்.ரவிச்சந்திரன், உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**